# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,935/7—1970 දෙසැම්බර් 11 වැනි සිකුරාදා — 1970.12.11

14,935/7 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (II)—விளம்பரங்கள்

## பதவிகள் — வெற்றிடம்

### அரசாங்க எழுதுநர் சேவைகளுக்கு ஆட்சேர்த்தல்

1970 ஆம் ஆண்டு நவம்பா மாதம் 20 ஆந் தேதிய இல. 14,933/1 ஐக் கொண்ட இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் காணப்படும் அரசாங்க எழுதுநர் சேவைகளுக்கு ஆட்சேர்த்தல் சம்பந்தமான அறிவிப்பிற்குச் செய்யப்படும் பின்வரும் திருத்தங்கள் பொதுத் தகவலுக்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றன :—

(அ) தற்போதுள்ள பந்தி 8 (II) என்பதை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடுக :—

" 8. (II) **வயது**.—அபேட்சகர்கள், 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆந் தேதியன்று 17 வயதிற்குக் குறையாமலும் 28 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

**குறிப்பு (I)**—வழமையான மேல் வயதெல்லையாகிய 23 வயது தற்போதைய ஆட்சேர்ப்பு நோக்கத்திறகு மட்டும் 28 வயதிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

**குறிப்பு (II)**—அரசாங்க சேவையில் (நிரந்தரமாக/தற்காலிகமாக/அமயமாக) வலவேயுள்ள அபேட்சகர்கள், அவர்கள் 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆந் தேதியன்று 45 வயதிற்குக் கீழுள்ளவர்களாயின், விண்ணப்பிப்பதற்குத் தகைமையுடையவராவர். 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆந் தேதியன்று நிரந்தரச் சேவையிலுள்ள அபேட்சகர்களின் விடயத்தில், மிகக் குறைந்த சேவைத் தகைமையெதுவும் வேண்டப்படமாட்டா. ஆயினும், தற்காலிகப் பணியாளர்களின் விடயத்தில், அவர்கள் 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆந் தேதிக்கு உடனடுத்து முன்னதாக அரசாங்கத்தின் கீழ் அறக்குறைந்தது ஓராண்டுத் தொடர்ச்சியான சேவையினையாவது முடித்திருத்தல் வேண்டும். அமயப் பணியாளர்களின் விடயத்தில், அவர்கள் 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆந் தேதிக்கு உடனடுத்து முன்னதாக அறக்குறைந்தது ஓராண்டு மொத்தச் சேவையினை உடையோராகவிருத்தல் வேண்டும். "

(ஆ) தற்போதுள்ள பந்தி 12 (iv) என்பதை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடுக :—

" 12. (iv) விண்ணப்பங்கள், இணைந்த சேவைகள் பணிப்பாளர், அரசாங்க நிருவாகத் திணைக்களம், அ. பெ. இல. 1699, கொழும்பு 7, என்னும் விலாசத்திற்கு 1971 ஆம் ஆண்டு சனவரி மாதம் 6 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ சென்றடையத் தக்கதாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். அத்தேதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பமெதுவும் நிராகரிக்கப்படும். எலவே அரசாங்க சேவையிலுள்ள அபேட்சகர்களும் தமது விண்ணப்பங்களை இணைந்த சேவைகள் பணிப்பாளருக்கு நேரடியாக அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் " அரசாங்க எழுதுநர் சேவைகளுக்கு ஆட்சேர்த்தல் " என்னுஞ் சொற்கள் தெளிவாக எழுதப்படல் வேண்டும். "

2. ஆட்சேர்ப்புச் சம்பந்தமான பிற பிரமாணங்கள் மாற்றமின்றியிருக்கும்.

எச். எஸ். வனசிங்க,
அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதி.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
(இணைந்த சேவைகள் பகுதி).
அ. பெ. இல. 1699,
கொழும்பு 7,
1970 ம் ஆண்டு திசெம்பர் மீ 11 ந் உ.

12–715

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.